3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகரக் காவல் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2024 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றார், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மற்ற எல்லோரும் உட்காருங்கள்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

தயவு செய்து இன்று கடைசி நாள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நிறைவு நாளன்று வேறு மாதிரி விவாதம் செய்ய வேண்டாம். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

[2024 ஜூன் 29

முற்பகல் 11–00

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் இருக்கையில் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்திருக்கிறார்கள். தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் எழுந்து நின்று வாய்ப்பு கோரினார்.)

***மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள் பெரிய சமுதாயம் என்று சொன்னால், அதையும் ஒருத்தர்தான் சொல்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: “2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.